டக்ளஸ்.

தமிழகத்தின் நவீன ஓவியப் பரப்பை மேலும் அழகாக்கி அடர்த்தியாக்கியவர்களில் ஒருவர். தன்னைவிட்டால் ஓவியம், ஓவியத்தை விட்டால் தான் என தான் சார்ந்த கலையுடன் சஞ்சரிப்பவர். சாதி, மதம், இனம் என்கிற வரையறைகளைத் தாண்டி 'யாவரும் கேளிர் யாதும் பிரபஞ்சம்' என்பதற்கான உயிர்நேய வெளிப்பாடாக கலைவடிவங்களை நினைப்பவர். பூர்விகத்தால் பிற மாநிலத்தவராக இருந்தாலும் தமிழகத்தில் கவின் கலை கற்று, தமிழ் மண்ணில் தங்கி, தமிழ்நாட்டு ஓவியராகவே தன்னை அடையாளப் படுத்தி வருபவர்.

இவருடைய சமீபத்திய ஓவியங்களின் கண்காட்சி சென்னை ஃபோகஸ் ஆர்ட் கேலரியில் நடந்தது. கைவினை

# வண்ணத்துப் பூச்சிகளால் மொய்க்கப்படும் உலகம்!



காகிதத்தில் எண்ணெய் வண்ணங்களாலும் தண்ணீர் வண்ணங்களாலும் படைக்கப்பட்டு கேன்வாஸில் பொருத்தப்பட்ட இருபதுக்கும் மேற்பட்ட ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப் பட்டிருந்தன.

இக்கண்காட்சிக்கு 'கண் தெரியாத கவிஞனும் வண்ணத்துப் பூச்சிகளும்' (The blind poet & Butterflies) என இவர் வைத்திருக்கும் தலைப்பு தரும் கவித்துவச் சுகத்துடன் இவரது ஓவியங்களுக்கு முன்னால் நிற்கிறோம். பாறை இடுக்கில் கசிந்து வரும் நீரூற்றைப்போல ஒவ்வொரு ஓவியமும் நம்முன் ஒரு கவிதையை சுரக்கச் செய்கிறது.

எல்லா ஓவியங்களும் கண்தெரியாத கவிஞனின் (குருடன், பார்வையற்றவன் என்கிற பதங்களை தவிர்ப்போம். ஏனென்றால் இவரது ஓவிய நாயகன் ஒரு கவிஞன். அவன் குருடனாகவோ, பார்வையற்றவனாகவோ இருக்க முடியாது. ஆகவே கண் தெரியாத என்றே விளிப்போம்) உலகத்தையே பிரதிபலிக்கின்றன.

ஒரு மாற்றுத்திறனாளியின் மனநிலைகளை சித்தரிப்பதென்பது அவ்வளவு எளிதான காரியமல்ல. அவர்களுக்கே பிடிபடாத தெரியாத பிரதேசங்களுக்குள்ளும் பிரவேசிக்க வேண்டிய சிரமமான பாதைகள் நிறைய உண்டு. இவரது ஓவிய நாயகன் ஒரு கவிஞனாகவும் இருக்கிறான். ஆனாலும் இவர் அந்த உலகத்தை அவ்வளவு அனாயாசமாக அள்ளி வந்திருக்கிறார் - ஒரு கலைஞனுக்கே சாத்தியமாகக் கூடிய 'இயற்கை அலைவரிசை' இது.

பூக்களில் அமர்ந்தும் தேனை உண்டும் போகிற பறக்கும் ஓவியங்கள் வண்ணத்துப் பூச்சிகள்.. கனவுகளும் கற்பனைகளும் துயர்களும் நம்பிக்கைகளும் நிறைந்தவர்கள் மாற்றுத்திறனாளிகள். இந்த ஓவிய நாயகன் கவிஞனாகவும் இருப்பதால் லட்சியங்களும் கலைமனமும் சேர்ந்துகொள்கின்றன..

இந்த இரண்டு உலகங்களையும் டக்ளஸ் மிக அழகாக இணைக்கிறார். எவ்வளவு அற்புதமான கற்பனை. இவருடைய கவிஞன் இந்தப் பிரபஞ்சம் முழுமையையும் வண்ணத்துப் பூச்சிகளால் ஆனதாகவே பார்க்கிறான். இன்பம், துன்பம், சோகம்,

தனிமை, மகிழ்ச்சி, துக்கம் யாவற்றையும் வண்ணத்துப் பூச்சிகளாகவே பார்க்கிறான். வண்ணத்துப் பூச்சிகளைக்கொண்டே நிரப்புகிறான்.

அவனது உடைகளில் வண்ணத்துப் பூச்சிகள் மொய்க்கின்றன... அவனது நிர்வாணத்தை வண்ணத்துப் பூச்சிகள் வாசிக்கின்றன... அவனுடைய கவிதை நோட்டுகளில் கவிதைகளாக... சமயத்தில் கவிதை நோட்டாக... புத்தக அலமாரிகளில்... மேசை டிராயர்களில்... வீட்டுச் சாளரத்தின் கம்பிகளில்... படுக்கை விரிப்பில்... அவனது கைக்குட்டையில்... அவனது மூன்றாவது கண்ணான





ஊன்றுகோலின் கைப்பிடியில்... உறங்கும் அவன் இமைகளில்... கனவுகள் ஊர்ந்து கொண்டிருக்கும் புருவப் பொட்டில்... அன்பு வழியும் இதயத்திற்கு மேலுள்ள சட்டைப் பையில்... துணிகள் காயும் கொடிக்கயிற்றில்... அவனது அணைப்பில் இருக்கும் தலையணையில்... என வண்ணத்துப்பூச்சிகள் அணி அணியாக, கொத்துக் கொத்தாக பிரவேசித்துக் கொண்டிருக்கின்றன. அமர்ந்தும் படுத்தும் கிடக்கின்றன. அவன் மேல் வண்ணம் பூசி எண்ணம் பகிர்கின்றன.

அவனது காலணிகளிலும் கூட வண்ணத்துப் பூச்சிகள் தான் இருக்கின்றன. அவனது கண்களாகவும் காதுகளாகவும் கூட வண்ணத்துப் பூச்சிகளாகவே இருக்கின்றன. தோட்டத்து செடிகளும் செடிகளின் இலைகளும் கூட வண்ணத்துப் பூச்சிகளாகவே பின்னித் திரிகின்றன. எவ்வளவு அழகான உலகம்! அழகை மட்டும்தானா இவ்வோவியங்கள் பேசுகின்றன.

கவிஞனும் சமூகத்தின் அங்கம்தான். அவனுக்கும் துக்கங்கள், வலிகள்... எல்லாம் உண்டு. வயிற்றுக்காகவும், தும்பைச் செடியேந்தி விரட்டி வரும் சிறுவர்களிடமிருந்து தப்பிப்பதற்காகவும்... என வண்ணத்துப் பூச்சிகளுக்கும் போராட்டங்கள் இருக்கின்றன. ஆனாலும் பூக்களை நோக்கியே பயணிக்கின்றன... வாழ்வை வண்ணமயமாகவே தொடர்கின்றன. இந்தக் கண்ணோட்டத்தில்தான் இக்கவிஞனின் வாழ்வியல் துக்கங்களையும் தம் ஓவியத்தில் பதிவு செய்கிறார்.

கண் தெரியாத இந்தக் கவிஞன் கவிதை எழுதிக் கொண்டிருக்கும் ஓவியத்தில் உதிர்ந்து கிடக்கிற ஒரு இலையில் தெரியும் மனிதமுகமும் அந்த முகத்தில் கண்களிருக்குமிடத்திலுள்ள வண்ணத்துப்பூச்சியும் ஒரு இலை உதிர்வதைப்போல இயல்பாக உதிர்வதும், ஒரு மரம் ஒரு இலையை இழப்பதுபோல இழப்பதும் எத்தனை ஆரோக்யமானது, பூரணத்துவம் வாய்ந்தது என்பதைத்தவிர வேறெதைச் சொல்கின்றன...

செடி கொடிகளுக்குள்ளிருந்து வண்ணம் மிளுக்கும் வண்ணத்துப் பூச்சிகள் - வாழ்வின் சிக்கல்களின் மூலமே வாழ்வின் உன்னதங்களை உருவாக்க இயலுமென்பதைத்தவிர வேறெதைச் சுட்டுகின்றன...

இந்த கவிஞனின் மேசைக்கடியில் கிடக்கும் பெண்ணின் முகத்தையும் அதில் அமர்ந்துள்ள வண்ணத்துப்பூச்சியையும் காதலின் பூப்பாகக் கொண்டால் பக்கத்தில் கைகளால் மூடிக்கொண்டிருக்கும் பெண்ணின் முகம் காதல் தோல்வியையோ துரோகத்தையோ நினைவூட்டுவதாகவே தெரிகிறது. அப்படியானால் அதிலிருந்து வெளியே வா ஆகாயமே இருக்கிறது என்பதைத்தானே அம்முகத்தின் (அவள் புறக்கணித்தது போன்ற போக்கில்) பின்னணியில் மேலெழுந்து பறக்கும் வண்ணத்துப் பூச்சிக் கூட்டங்கள் சொல்கின்றன.

இத்தனை அற்புதமான அழகான வண்ணத்துப் பூச்சிகள் அழிந்து வருகின்றன என்கிற இயற்கை சார்ந்த வேதனையும் மிக இயல்பாக நம்முன் எழுகிறது. இந்தக் கவிஞனைச் சுற்றிப் பறக்கும் நிறமிழந்த வண்ணத்துப் பூச்சிகளும் பின்னணியிலுள்ள கைத்தடங்களும் இம்மனவோட்டத்தை எழுப்புவதாக இருக்கின்றன.

இப்படி மனித சமூகத்தின் அகவாழ்க்கை சார்ந்தும் டக்ளஸின் ஓவியங்கள் அலைகளைக் கிளப்புகின்றன. கவலைகளை துடைக்கின்றன.

காய்ந்து போன செங்கா நண்டுகளின் ஓட்டையும், குளத்தோரச் சேற்றையும், சாம்பல் பழங்களையும், புளியம்பழத்தின் ஓடுகளையும், அந்தி நேரத்து கரிசல் காட்டையும் ஞாபகமூட்டும் இவரது மங்கலான வண்ணங்கள் மாற்றுத் திறனாளிகளின் உலகத்தோடு நம் மனதை இயல்பாக பொருத்துகின்றன. கள்ளங் கபடமற்ற வண்ணங்கள்.

இவருடைய எல்லா ஓவியங்களிலும் இருண்மையை சுட்டுவதுபோல கறுப்பு வண்ணம் தொடர்ந்து வருகிறது. அது இந்தக் கவிஞனின் வாழ்வின் ஆழத்திற்குள் இழுத்துச் செல்கிறது. விதவிதமான மௌனங்களையும் பெருமூச்சுகளையும் உணர்த்துகிறது.

இவரது இந்த ஓவியங்களை கச்சிதமாக வரிசைப் படுத்தினால் சகல வலிகளும் வேதனைகளும், இருளும் ஒளியும் நிரம்பிய ஒரு அற்புதமான நாவலை கலைமனம் நெகிழ்ந்த



பார்வையாளனால் வாசிக்க முடியும். ஒரு படைப்பாளியைப் பற்றிய ஒரு நாவலை தனக்குள் எழுதிப் பார்க்க முடியும்.

வண்ணத்துப் பூச்சிகள் ஒரு படைப்பு. கவிஞன் ஒரு படைப்பாளி. இந்த இரண்டுக்குமான உலகத்தை இவர் ஏன் ஒரு கண் தெரியாத கவிஞனின் மூலமாக படைத்திருக்கிறார். சொல்லப்போனால் இவருடைய ஓவிய நாயகன் கண் தெரியாதவனே அல்ல. கண்தெரிவதென்பது பார்ப்பதல்ல. பார்வையும், புரிதலும் விமர்சனமும்தான். அப்படியானால் பார்வையாளனை நோக்கி இந்தக் கவிஞன் நகர்த்தும் தரிசனம் என்ன?

ஒரு படைப்பாளியின் உலகம் என்பது நடைமுறையில் புறவுலகத்திற்கு நேர்எதிரானது. அவனுடைய நியாயங்கள், தர்க்கங்கள், நேசங்கள், யாசிப்புகள்.. எல்லாமே பிரபஞ்சம் தழுவியது. எல்லாம் எல்லாமாகவே இருக்க வேண்டுமென்கிற 'வெளி'யைக் கொண்டது. நடைமுறை சமூகம் தொன்றுதொட்டு இதிலிருந்து விலகியே வந்திருக்கிறது. வளர்ந்து விட்டிருக்கிறது. அதனாலேயே முரண்பாடுகள் மலிந்துபோய்விட்டன. ஒரு கட்டம் வரை ஒரு படைப்பாளி இவற்றோடு போராடுகிறான், பதிவு செய்து கட்டுடைக்கிறான். இது எவ்வளவு காலத்திற்கு தாக்குப் பிடிக்கும். சூரியன் எல்லோர்க்கும் ஒரேமாதிரியா விடிகிறது.

அவனுக்கு நேர்கிற நெருக்கடிகள், புறக்கணிப்புகளின் வழியாக ஒரு நிலைப்பாட்டுக்கு மேல் அவன் புறஉலகினின்று விலக முயல்கிறான் அல்லது அவன் வெளியேறுவதற்கான சாத்தியங்களை புற உலகம் உருவாக்கி விடுகிறது. அதாவது வண்ணத்துப் பூச்சிகள் உருவாக்குகின்றன.

வண்ணத்துப் பூச்சிகள் இந்த கண் தெரியாத கவிஞனின் புற உலகம்தான். ஆனாலும் இதையெல்லாம் தாண்டியும் இவ்வுலகத்தின் மீது நேசத்தைப் பொழிகிறான். அக்கறை கொள்கிறான். ஏனென்றால் இழந்தவர்கள் இருக்க வேண்டியதைத் தான் கனவு காண முடியும் இல்லையா.

இதன் தொடர்ச்சியாகவே தனக்குள்ளேயே இப்பிரபஞ்சத்தை புதுப்பிக்கிறார்கள். அதன் மீது படிந்துள்ள மாசுகளை துடைக்கிறார்கள். இதற்காக கொஞ்சம் தள்ளி நின்று வேலை பார்க்க வேண்டிய தேவை வந்துவிடுகிறது.

இதன் பொருட்டே நமது படைப்பாளிகள் தனிமையை நாடுகிறார்கள். ஞானிகள் காட்டுக்குப் போகிறார்கள். கண்களை மூடிக்கொள்கிறார்கள். உலகம் திறந்து கொள்கிறது.

படைப்பாளியிடமிருந்து உன்னதமான படிப்பினைகளைப் பெறுவதற்காக இப்புறவுலகம் நிகழ்த்தும் இந்த விந்தையைத்தான் டக்ளஸின் படைப்பாளி நம்முன் பகிர்கிறான்.

**குறிப்பு: சி.டக்ளஸ் - 1951ல் பிறந்தவர். சென்னை ஓவியக் கல்லூரியில் கவின்கலை பயின்றவர். ஜெர்மனி (1982, 83, 86), மும்பை (1992), நெதர்லாந்து (1994) சென்னை (2008), கொல்கத்தா (2008) ஆகிய இடங்களில் தனிமனித காட்சிகளும், டெல்லி, ஜெர்மனி, பிரான்ஸ், மும்பை, நெதர்லாந்து, லண்டன், ஸ்வீடன், பெங்களூர், கொச்சின் ஆகிய ஊர்களில் குழுக் கண்காட்சிகளும் நடத்தியுள்ளார்.**

**தேசிய லலித் கலா அகாடமி, பாரத் பவன் பின்னாலே போபால், இந்திய அரசு - கல்ச்சுரல் பெல்லோஷிப், யுனெஸ்கோ கிராண்ட், சார்லஸ் வாலஸ் டிரஸ்ட் - ஆகிய விருதுகளைப் பெற்றுள்ளார். முழுநேர ஓவியராக தன்னை தொடர்பவர்.**

**- கார்முகில்**